**செய்தி வெளியீடு எண்: 02/10/2021** **நாள்: 01.10.2021**

## பத்திரிக்கைச் செய்தி

## சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தில் இந்திய சுதந்திரத்தின் 75-வது ஆண்டு விழா (Azadi ka Amrut Mahostav) - பல்வேறு நிகழ்ச்சிகள் இன்று நடைபெற்றது

இந்திய சுதந்திரத்தின் 75-வது ஆண்டு விழாவின் (Azadi ka Amrut Mahostav) ஒரு பகுதியாக சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம், தொடர்ந்து பல்வேறு நிகழ்ச்சிகளை நடத்தி வருகிறது. இதன் தொடர்ச்சியாக சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம் இன்று (01.10.2021) பின்வரும் நிகழ்ச்சிகளை நடத்தியது.

**சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தின் பணியாளர்கள் தங்கும் குடியிருப்பு வளாகத்தில் பூர்வீக வகை நாட்டு மரக்கன்றுகள் நடப்பட்டது:**

சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம், ரோட்டரி கிளப் ஆ◌ஃப் மெட்ராஸ் பல்லவா மற்றும் ரோட்டரி கிளப் ஆ◌ஃப் சென்னை பாரதி அமைப்புகளுடன் இணைந்து இன்று (01.10.2021) கோயம்பேட்டில் சென்னை மெட்ரோ இரயில் நிறுவனப் பணிமனையில் உள்ள பணியாளர்கள் தங்கும் குடியிருப்பு வளாகத்தில் சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தின் இயக்குநர் திரு. ராஜேஷ் சதுர்வேதி (இயக்கம் மற்றும் அமைப்புகள்) அவர்கள் முன்னிலையில் பூர்வீக வகை நாட்டு மரக்கன்றுகள் நடப்பட்டது. இந்நிகழ்வின் போது ரோட்டரி கிளப் உறுப்பினர்கள், சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தின் உயர் அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் உடன் இருந்தனர்.

**கோயம்பேடு மெட்ரோ இரயில் நிலையத்தில் ஆரூவி குழந்தைகள் இல்லம் காப்பகத்தின் 60 குழந்தைகள் பட்டாம்பூச்சி வடிவத்தில் தோட்டம் அமைத்தனர்:**

சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம், ஜியோ இந்தியா ◌ஃபவுண்டேஷனுடன் இணைந்து கோயம்பேடு மெட்ரோ இரயில் நிலையத்தில் வாகனம் நிறுத்தும் பகுதியில் ஆரூவி குழந்தைகள் இல்லம் (அயனாவரம்) காப்பகத்தின் 60 குழந்தைகள் பூர்வீக வகை நாட்டு மரக்கன்றுகள் கொண்டு பட்டாம்பூச்சி வடிவத்தில் தோட்டம் அமைத்தனர். இந்நிகழ்வின் போது சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தின் உயர் அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் உடன் இருந்தனர்.

இதனை தொடர்ந்து இக்காப்பகக் குழந்தைகள் கோயம்பேடு மெட்ரோ இரயில் நிலையத்திலிருந்து விமான நிலையம் வரை மெட்ரோ இரயிலில் பயணம் செய்தனர்.

**சுங்கச்சாவடி மற்றும் கிண்டி மெட்ரோ இரயில் நிலையங்களில் இலவச பொது சுகாதார மருத்துவ முகாம் நடைபெற்றது:**

சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம், ◌ஃபோர்டிஸ் மருத்துவமனையுடன் (Fortis Hospital) இணைந்து மெட்ரோ இரயில் பயணிகள் மற்றும் பொதுமக்களின் நலனுக்காக

இலவச பொது சுகாதார மருத்துவ முகாம்களை 20.09.2021 முதல் மெட்ரோ இரயில் நிலையங்களில் நடத்தி வருகிறது.

இந்த இலவச பொது சுகாதார மருத்துவ முகாம் இன்று (01.10.2021) சுங்கச்சாவடி மற்றும் கிண்டி மெட்ரோ இரயில் நிலையங்களில் காலை 10 மணி முதல் 12 மணி வரையிலும் மற்றும் மாலை 4 மணி முதல் 6 மணி வரையிலும் நடைபெற்றது. மெட்ரோ பயணிகள், பொதுமக்கள் மற்றும் மெட்ரோ ஊழியர்கள் காலையில் 125 நபர்கள் மாலையில் 145 நபர்கள் உட்பட சுமார் 270 நபர்கள் இந்த இலவச பொது சுகாதார மருத்துவ முகாமில் இன்று பயனடைந்தனர்.

இந்த இலவச பொது சுகாதார மருத்துவ முகாமில்

1. பி.எம்.ஐ (உயரம் மற்றும் எடை)
2. இரத்த அழுத்தம்
3. சீரற்ற இரத்த சர்க்கரை
4. வெப்பநிலை
5. துடிப்பு போன்றவற்றிற்கான பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு அவற்றிற்கான ஆலோசனைகளும் வழங்கப்பட்டது.

கொரோனா வைரஸ் தொற்றை தடுப்பதற்காகவும் அனைத்து பயணிகளின் பாதுகாப்பான பயணத்திற்காகவும் மெட்ரோ இரயில் நிலையங்களில் நுழைவதற்கும் மெட்ரோ இரயில்களில் பயணிப்பதற்கும் அனைத்து பயணிகளும் கட்டாயம் சரியாக முகக்கவசம் அணிந்திருப்பதுடன் தனிமனித இடைவெளியைக் கடைபிடித்து பயணம் செய்து சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்திற்கு ஒத்துழைப்பு நல்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

***********************